**பணித்தாள் 3**

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

**முற்றும்உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ**

**குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் - மற்றொருவர்**

**ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ**

**நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய்.**

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
3. முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்ற முக்குணங்கள் யாவை?
4. தமிழ் பெற்ற குணங்கள் எத்தனை?
5. மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணம் எத்தனை?
6. தமிழ் பெற்ற வண்ணங்கள் எத்தனை?
6. முக்குணம் விரித்து எழுதுக.
7. இலக்கணக்குறிப்பு தருக : முக்குணம், இலா, பெற்றாய், ஆக்கிய, நோக்கிய
8. அடி எதுகையை எடுத்து எழுதுக.
9. சீர் மோனை எடுத்து எழுதுக.
10. நா என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

## பணித்தாள் 4

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

**ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு**

**ஆன நவரசம்உண் டாயினாய் - ஏனோர்க்கு**

**அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ**

**ஒழியா வனப்புஎட்டு உடையாய்.**

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
2. 'வனப்பு' என்பதன் பொருள் யாது?
3. இப்பாடலை இயற்றியவர் யார்?
4. அடி எதுகையை எடுத்து எழுதுக.
5. உணவின் சுவைகள் எத்தனை?
6. இலக்கணக் குறிப்பு தருக : அழியா, ஒழியா
7. தமிழ், செவிகளுக்கு விருந்தளிக்கும் சுவைகள் எத்தனை?
8. வனப்புகள் எத்தனை?
9. சீர் மோனையை எடுத்து எழுதுக.
10. 'ஊனரசம்' என்பது எதைக் குறிக்கும்?